*Tamilmanam International Research Journal of Tamil Studies*
*Volume 7, Issue 03 (March -2026)*
www.tamilmanam.in
*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07032026.08*

**தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI & Global Indexing | Google Scholar Impact Factor | Multidisciplinary
Issue DOI: https://doi.org/10.63300/tm07032026

# Thinaikkotpattu nokkil Sakthi Jyothi's "Nilam Pugum Sorkal" (Words that Enter the Land) Poetry Collection - A Review

**S. Nirmala[1*], Dr. A. Maria Sebastin[2],**
[1]Reg. No. 22PHD0268, Full-time Doctoral Research Scholar, Department of Tamil, School of Social Sciences and Languages, VIT University, Vellore.
[2]Research Guide, Assistant Professor, School of Social Sciences and Languages, VIT University, Vellore.
Email: mariasebastin.a@vit.ac.in
*Correspondence: nirmala.s2022@vitstudent.ac.in, Tel: +918667013569

**Article Info**
Received on 26-Feb-2026, Revised on 27-Feb-2026, Accepted on 01-Mar-2026, Published on 06-Mar-2026

## ABSTRACT

*Sakthi Jothi's poetry collection "Nilam Pugum Sorkal" offers a powerful reimagining of the Sangam literary Thinai tradition within a contemporary poetic framework. The classical Thinai concept, which expresses human emotions through the relationship between land and time, becomes a renewed artistic tool in her work. By continuing this ancient methodology, the modern Tamil woman poet binds the Thinai structure with the lived experiences of the female body, mind, and society, giving her poems a distinctive and relevant literary identity. The five landscape based emotions Kurinji, Mullai, Marutham, Neithal, and Paalai transform in her poetry into expressions of love, resistance, loneliness, sorrow, and the search for freedom, thereby functioning as powerful feminist voices. Through this transformation, natural imagery such as seasons, trees, time, and other Sangam literary symbols resonate with her personal experiences, creating a layered poetic effect. While the Sangam era Thinai dealt with land, time, and human emotions through nature's reflection, Sakthi Jothi reinterprets these same elements by linking them to the psychological and social realities of women. Thus, each Thinai becomes a symbolic representation of feminist emotions like love, separation, waiting, opposition, and liberation. Natural symbols like rain, earth, trees, and night deepen the representation of feminine uniqueness. By embracing and simultaneously transcending the Sangam tradition, her poetry forges a new literary pathway for the modern female voice, expanding the potential of the Thinai framework from a feminist perspective.*

***KEYWORDS:*** *Sakthi Jothi, Nilam Pugum Sorkal, Thinai concept, Five Thinai, Sangam literature, feminine voice, emotion, society, natural symbols, feminism.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 7, Issue 03 (March -2026)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm07032026.08*

# திணைக்கோட்பாட்டு நோக்கில் சக்தி ஜோதியின் "நிலம் புகும் சொற்கள்" கவிதைத் தொகுப்பு - ஓர் மீளாய்வு

[1]**சே.நிர்மலா,** Reg.No.22PHD0268, முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, சமூக அறிவியல் மற்றும் மொழிகள் பள்ளி, வி.ஐ.டி, பல்கலைக்கழகம், வேலூர்.

[2]**முனைவர் அ.மரிய செபஸ்தியான்,** நெறியாளர், உதவிப்பேராசிரியர், சமூக அறிவியல் மற்றும் மொழிகள் பள்ளி, வி.ஐ.டி, பல்கலைக்கழகம், வேலூர்.

**ஆய்வுச்சுருக்கம்**

சமகாலத் தமிழ் பெண் கவிஞரான சக்தி ஜோதியின் *"நிலம் புகும் சொற்கள்"* கவிதைத்தொகுப்பு, சங்க இலக்கியத் திணைக்கோட்பாட்டை நவீனக் கவிதை வாசிப்பில் மறுவடிவம் பெறச் செய்கிறது. சங்க இலக்கியத் திணைக்கோட்பாடு, நிலம் மற்றும் பொழுது ஆகியவற்றை முதற்பொருள்களாக கொண்டு அமைவதன் மூலமாக மனித உணர்வுகளை இயற்கையின் வழியே அழகாக வெளிப்படுத்துகின்றது. இக்கோட்பாட்டின் மரபைத் தொடரும் வகையில், சமகால பெண் கவிஞரான சக்தி ஜோதி தனது கவிதைகளை "நிலம் புகும் சொற்கள்" என்னும் தொகுப்பில், திணைமுறையை உள்ளடக்கிய பெண்களின் உடல், மனம், சமூக அனுபவங்கள் ஆகியவற்றோடு நவீன வடிவில் பிணைத்து இலக்கிய தன்மையை வெளிப்படுத்துகிறார். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய திணைகள் அவரது கவிதைகளில் காதல், எதிர்ப்பு, தனிமை, துயரம், சுதந்திர தேடல் போன்ற பெண்ணியக் குரல்களின் வெளிப்பாடாக மாற்றமடைந்து இருப்பதை காணமுடிகின்றது. இதன் மூலம் சக்தி ஜோதி கவிதையில் இயற்கை உருவகங்கள், பருவங்கள், பொழுதுகள் உள்ளிட்ட சங்க மரபுகள் அவரது கவிதைகளில் சுய அனுபவங்களுடன் எதிரொலிக்கின்றன. இது திணைக்கோட்பாட்டைத் தொடர்வதோடு, அதனை மீள்பதிப்பாக்கம் செய்யும் வகையில் ஒரு தனித்துவமான சமகால பெண் இலக்கிய சூழலை உருவாக்குகிறது. சங்க இலக்கியத்தின் திணைக்கோட்பாடு நிலம், பொழுது, கருப்பொருள், உரிப்பொருள் போன்ற மூன்று வகையாக அமைப்புகளின் வழியாக மனிதனின் உணர்வுகளையும் வாழ்வியலையும் இயற்கையின் பிரதிபலிப்பாகக் காட்டியது. இதனையே சக்தி ஜோதி தனது *"நிலம் புகும் சொற்கள்"* போன்ற கவிதைகளில் பெண்ணின் உடல், உளவியல், சமூக அனுபவங்களை இயற்கை உருவகங்களோடு இணைத்து மீள்பதிப்பாக்கம் செய்கிறார். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய திணைகள், அவரது கவிதைகளில் காதல், பிரிவு, காத்திருப்பு, எதிர்ப்பு, சுதந்திரம் போன்ற பெண்ணிய உணர்வுகளுக்கான எழுதுருவமாக மாறுகின்றது. மரம், மழை, மண், பருவம், இரவு போன்ற இயற்கைச் சின்னங்கள் பெண் அனுபவங்களின் தனித்துவத்தை அனைவரும் அறியும் வகையில் ஆழமாக வெளிப்படுத்துகின்றது. இவ்வாறு, சங்க மரபைத் தழுவியும் அதனைக் கடந்து சென்றும், அவரது கவிதைகள் சமகாலப் பெண் குரலுக்கான புதிய பாதையில் இலக்கிய வழியைக் கட்டமைக்கின்றது. இது திணைக்கோட்பாட்டின் சாத்தியங்களைப் பெண்ணிய பார்வையில் விரிவுபடுத்தும் ஆழமான இலக்கியச் சாதனையாக அமைந்துள்ளது.

**திறவுச்சொற்கள்:** சக்தி ஜோதி, நிலம் புகும் சொற்கள், திணைக்கோட்பாடு, ஐந்திணை, சங்க இலக்கியம், பெண் குரல், உணர்வு, சமூகம், இயற்கைச் சின்னங்கள், பெண்ணியம்.



தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07032026.08*

**முன்னுரை**

சமகாலத் தமிழ் பெண் கவிஞர்களில் முக்கியமான குரலாக வலியெழும் சக்தி ஜோதி, தனது கவிதைகளில் பெண்களின் உடல், உணர்வு, காதல், குடும்பம், தாய்மை, சமூகக் கட்டுப்பாடுகள் ஆகியவை தொடர்பான அனுபவங்களை ஆழமாகவும் நேர்மையாகவும் வெளிப்படுத்துகிறார். அடக்கப்பட்ட குரல்களுக்கு வெளிச்சமிட்டுக் கேள்வியாக எழும் அவரது புனைவுகள், பெண் வாழ்க்கையின் சிக்கல்களை நேரடியாகக் கேள்விக்குள்ளாக்குகின்றன. இயற்கை உருவகங்களை உளவியல் உணர்வுகளோடு பிணைத்து, பெண்களின் வாழ்வியல் எதிர்ப்புகளுக்கு புதிய அர்த்தங்களை உருவாக்குகிறார். இக்கவிதைகள், தமிழில் "பெண் கவிதை" எனப் பிரித்துக் கூறப்படும் இலக்கியப் போக்கில் தனித்துவம் கொண்ட ஒரு குரலாக அமைந்துள்ளன. சங்க இலக்கிய மரபில் தோன்றிய திணைக்கோட்பாடு, மனித உணர்வுகளை நிலம், பொழுது மற்றும் இயற்கைச் சூழலுடன் பிணைக்கும் ஒரு அழகிய நடைமுறையாக இருந்தது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை போன்ற திணைகள் பல்வேறு உணர்வுகளுக்கு இணையாக அமைந்திருந்தன. இம்மூலமாக சங்க இலக்கிய மரபை எதிரொலிக்கச் செய்யும் வகையில், சக்தி ஜோதி தனது "நிலம் புகும் சொற்கள்" கவிதைத்தொகுப்பில் திணைமுறையைப் பெண்ணின் உடல், உளவியல், சமூக அனுபவங்களோடு இணைத்து ஒரு புதுமையான கண்ணோட்டத்தில் வாசிக்க வழிவகுக்கிறார். பாரம்பரிய திணைகளில் இருந்து பெண்ணிய வாசிப்பு நோக்கில் அவர் உருவாக்கும் புதிய களங்கள், பெண்களின் சுதந்திரத்தையும், அடக்குமுறையையும், எதிர்ப்பையும் பிரதிபலிக்கும் சமூகச்சூழலாகக் கவிதைகளை மாற்றுகின்றன. இதன் வழியாக, அவரது கவிதைகள் சங்க மரபைத் தொடர்வதோடு அதனை மீள்பரிசீலிக்கும் தனித்துவமான பெண் இலக்கியப் பரப்பை உருவாக்குகின்றன.

**நிலம் புகும் சொற்கள்**

**சக்தி ஜோதியின்** *"நிலம் புகும் சொற்கள்"* **கவிதைகள்,** சங்க இலக்கியத் திணைக்கோட்பாடு இயற்கையை மையமாகக் கொண்டு மனித உணர்வுகளை பிரதிபலிக்கிறது. மனித பிணைப்பைத் தொடர்ந்து, அதனை சமகாலப் பெண்ணின் வாழ்க்கை அனுபவங்களோடு புதிதாக இணைக்கின்றனர். குறிஞ்சியின் காத்திருப்பு, முல்லையின் அமைதி, மருதத்தின் பரபரப்பு, நெய்தலின் பிரிவு, பாலையின் வறட்சி ஆகிய திணைச் சின்னங்கள், சக்தி ஜோதியின் கவிதைகளில் பெண்ணின் காதல், ஏக்கம், துயரம், தனிமை, சமூகத் தடைகள் மற்றும் சுதந்திரத் தேடல் போன்ற அனுபவங்களை வெளிப்படுத்தும் வடிவங்களாக மாறுகின்றன. குறிப்பாக, சக்தி ஜோதி தன்னை "வெள்ளி வீதியாரின் மகள்" என அறிமுகப்படுத்துவதன் மூலம், பெண்ணின் உடலோடு தொடர்புடைய உளவியல் நிலைகள் மற்றும் எதிர்ப்புக் குரல், அவரது கவிதைகளில் தெளிவாக வெளிப்படுகின்றன. இவ்வாறு, *"நிலம் புகும் சொற்கள்"* அகத்திணையின் மூலம் பெண்ணின் அடக்கப்பட்ட குரலை நிலத்தின் உருவகங்களோடு இணைத்து, பாரம்பரிய திணைக்கோட்பாட்டை சமகாலப் பெண் குரலுக்கான புதிய வாசிப்பு வாயிலாக மாற்றுகிறது.

**திணைக்கோட்பாடு**

திணைக்கோட்பாடு தமிழ்ச் சங்க இலக்கியங்களில் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு இலக்கணக் கோட்பாடாகும். இது மனிதனின் உணர்வுகளையும் சமூக நிகழ்வுகளையும் இயற்கைச் சூழல்களோடு தொடர்புபடுத்தி விளக்கும் ஒரு அமைப்பு முறையாகும். திணைகள் பொதுவாக


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

**அகத்திணை** மற்றும் **புறத்திணை** இரண்டு பிரிவுகளாகப் பகுக்கப்படுகின்றன. அகத்திணை காதல் மற்றும் உள்ளுணர்வுகளைச் சித்தரிக்கும் வகையில் அமைகிறது. இதில் **குறிஞ்சி** (சந்திப்பு), **முல்லை** (காத்திருப்பு), **மருதம்** (ஊடல்), **நெய்தல்** (பிரிவு), **பாலை** (துயர நிலை) என ஐந்து திணைகள் அடங்குகின்றன. புறத்திணை என்பது வெளிப்புறச் செயல்கள், அதாவது போராட்டம், புகழ், அரசியல் நிகழ்வுகள் போன்றவற்றைக் குறிப்பதாகும். ஐந்திணையும் அதனுடன் தொடர்புடைய தெய்வங்களும் குறிப்பிடப்படுகின்றன. இது தமிழ்ச் சங்க இலக்கியங்களில் திணை சார்ந்த நம்பிக்கைகளை உருவாக்கிய வண்ணம், மக்கள் இயற்கையையும் இறையையும் ஒரே அமைப்பாகக் கண்ட முறையை பிரதிபலிக்கிறது என்பதை (ஜெ.ஜெயபிரியா, 2021) குறிப்பிடுகின்றார். மொத்தத்தில், திணைக்கோட்பாடு தமிழர்களின் இயற்கை நெருக்கத்தையும், இயற்கை வழியாக மனித உணர்ச்சிகளைச் சிறப்பாகப் பரிமாறிய கவிஞர்களின் எழுத்துக்களில் கலை நயத்தையும் வெளிப்படுத்துகிறது.

**ஐந்திணை**

குறிஞ்சி முதலான ஐந்திணைகளில் நிலத்தின் தன்மையை அடிப்படையாகக் கொண்டு *முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள்* எனும் முப்பொருள்கள் அமைக்கப்பட்டு, தமிழர் வாழ்வியல் ஒழுங்குபடுத்தப்பட்டதைக் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. நிலமே முதற்பொருளாகக் கருதப்பட்டு, அதில் தோன்றும் பயிர்கள், பறவைகள், விலங்குகள், மரங்கள் போன்றவை கருப்பொருளாகவும், அவற்றோடு தொடர்புடைய மனிதர்களின் வாழ்க்கை நெறி உரிப்பொருளாகவும் அமைந்தன. மலையும் ஆறும், காடும் வயலும், கடலும் செடிகளும், பறவைகளும் விலங்குகளும் மக்கள் வாழ்வில் பயன்பட்டதோடு, அவர்களின் உணர்வுகளையும் பிரதிபலித்தன. இதனால், ஐந்திணை தமிழரின் இயற்கை, உணர்வு, பண்பாடு, அகவாழ்வு ஆகியவற்றோடு பிணைந்த சமூக ஒழுங்குக் கோட்பாடாகவும், மனித வாழ்க்கையின் அடித்தளத்தை நிலம் மற்றும் காலத்தோடு இணைக்கும் வாழ்வியல் முறையாகவும் விளங்குகிறது. பரத் ஆ., (2025) அவர்கள், "சங்ககாலத் தமிழர்கள் தங்களுடைய வாழ்க்கை, தொழில் மற்றும் இன அடையாளங்களை **ஐந்து திணைகளின் (குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை)** இயற்கைச் சூழலோடு இணைத்து விளக்கியுள்ளனர் என்பதை குறிப்பிடுகிறார். குறிப்பாக, நிலப்பரப்பு, வாழ்வியல் மற்றும் தொழில் சார்ந்த அடையாளங்கள், தமிழ் இனக்குழுத் தன்மையை உருவாக்கிய முக்கிய அடிப்படையாகக் காணப்படுகின்றது". இதனை தொடர்ந்தபடி, சக்தி ஜோதியின் *"நிலம் புகும் சொற்கள்"* கவிதைகள் நிலத்தையும் இயற்கைச் சின்னங்களையும் பெண்ணின் காதல், ஏக்கம், துயரம், தனிமை, சமூகத் தடைகள் போன்ற அனுபவங்களோடு இணைத்து, திணைக்கோட்பாட்டை சமகாலப் பெண் குரலின் வெளிப்பாடாக மாற்றுகிறனர்.

**முதற்பொருள்**

தமிழ்ச் சங்க இலக்கியங்களில் *முதற்பொருள்* எனும் அமைப்பில் நிலமும் (ஐவகை நிலம்) பொழுதும் (காலம்) அடிப்படையாகக் கருதப்படுகின்றன. இதில் "நிலம்" முதன்மையும் அடித்தளமுமாக அமைகிறது. காலத்தை சுட்டும் "பொழுது" பெரும்பொழுது, சிறுபொழுது என்ற இரண்டு வகைகளில் வகைப்படுத்தப்பட்டுள்ளது. ஆண்டு அடிப்படையில் உள்ள ஆறு பருவங்களைக் குறிப்பதே பெரும்பொழுது, நாளின் அடிப்படையில் பகலில் மூன்றும் இரவில் மூன்றும் என மொத்தம் ஆறு சிறுபொழுதுகளைக் குறிப்பதே சிறுபொழுது ஆகும். பெருமாள் &


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07032026.08*

இராமமூர்த்தி (2022) அவர்கள், சங்க இலக்கியத்தில் மருதத்திணையின் முதற்பொருளாக **வயல் சார்ந்த "பழனம்" நிலம்** மற்றும் **சிறுபொழுதுகள்** (இரவுக்கரை, விடியற்காலை) குறிப்பிடப்படுவதை விளக்குகின்றனர். இது மருதத்திணையின் நிலவியல் அடையாளத்தையும் அக்கால சமூக வாழ்வியலையும் பிரதிபலிக்கிறது. இவ்வகைப்பாட்டைத் தொல்காப்பியர் விரிவாக விளக்கி, வாழ்க்கைச் சூழலோடு பொழுதை இணைத்துக் கூறுகிறார். இதனையே அவர், *"முதலெனப் படுவது நிலம்பொழுது இரண்டின் இயல்பென மொழிப இயல்புணர்ந் தோரே"* (தொல். பொருள். அகத்திணையியல்–23.4) என்று வரையறுத்துள்ளார்.

**இதனையே ஔவையார் முல்லை நிலத்தையும், முல்லை நிலத்தின் பொழுதாக அமைந்த பெரும்பொழுதிணையும் பற்றியும் பாடல்களில் காணலாம்,**

**"பெய்த குன்றத்துப் பூநாறு தண்கலுழ்**
***மீமிசைச் தாஅய வீஇ சுமந்துவந்***
**மறந்தோர் மன்ற மறவா நாமே**
**கால மாரி மாலை மாமழை**
**இன்னிசை யுருமின முரலு**
**முன்வரல் ஏமம் செய்தகன் றோடு"**
**(குறுந்தொகை-200)**

இப்பாடலில், முல்லை திணைக்குப் பெரும்பொழுதான கார்ப்பருவத்தையும் (கார் காலம்), சிறுபொழுதான மாலை நேரத்தையும் காணமுடிகின்றது. நிலமும் பொழுதும் ஒன்றோடொன்று இணைந்து ஒரு சமூகத்தின் இயற்கைச் சூழலையும், மனித உணர்வுகளையும் வடிவமைக்கும் அடிப்படையாக அமைவதோடு, சங்க இலக்கியங்களில் அவை முதற்பொருளாக உயர்வூட்டப்படுவதும், அவற்றின் பரிணாமம் மக்கள் வாழ்வியலை ஒழுங்குபடுத்தும் கோட்பாடாக மாற்றப்பட்டிருப்பதும் தெளிவாகக் காணப்படுகிறது. இதன் மூலம் நிலமும் பொழுதும் மனித உணர்வுகளையும் சமூக வாழ்வியலையும் வடிவமைக்கும் அடிப்படையாகச் சங்க இலக்கியங்களில் உயர்த்தப்பட்டுள்ளன. இவ்வாறே, சமகாலப் பெண் கவிஞரான, சக்தி ஜோதியின் அந்தரங்க முகம் கவிதையில் காணலாம்,

**"இரவு**
**நண்பனாகி வெகு நாட்களாயிற்று**
**அது என் அந்தரங்கங்களை**
**இருட்டுப் போர்வையினால் கழற்றிய பின்பும்கூட**
**போர்த்திப் பாதுகாக்கின்றது**
**பகலின் முகமூடிகளைக்**
**கழற்றிய பின்பும்கூட**
**என் முகத்தைப் பாதுகாக்கின்றது**
**முகமூடி நீங்கிய**
**என் முகத்தை**
**நீ எப்பொழுது**
**பார்க்கப் போகிறாய்**
**என்னைவிட இந்த இரவு**
**ஆசைப்பட்டுக் காத்திருக்கிறது"[1]**

என்ற கவிதையின் மூலம் சங்க இலக்கியங்களில் "நிலமும் பொழுதும்" உணர்வுகளை

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07032026.08*

வடிவமைக்கும் **முதற்பொருள்கள்**. சக்தி ஜோதியின் "அந்தரங்க முகம்" கவிதையில் "இரவு" என்பது **பெண்ணின் தனிமை, ஆசை, நாணம், பாதுகாப்பு** ஆகியவை ஒன்றாக இணைந்த **உணர்வுச் சின்னமாக** தோன்றுகிறது. இதன் மூலம் பாரம்பரியத்தின் **முதற்பொருள் கொள்கை (நிலம்–பொழுது)** நவீனக் கவிதையிலும் **பெண்ணிய உணர்வுகளின் தொடர்ச்சியாக** உயிர்ப்பெடுகிறது.

**நிலம்**

ஐந்து வகையான நிலமாகிய குறிஞ்சி - மலை, முல்லை - காடு, மருதம் - வயல், நெய்தல்- கடல், பாலைக்குத் தனியாக ஒரு நிலமில்லை என்பதை ,

**"மாயோன் மேய காடுறை உலகமும்**
**சேயோன் மேய மைவரை உலகமும்**
**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**
**வருண்ணன் மேய பெருமணல் உலகமும்**
**முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்**
**சொல்லிய முறையால் சொல்லவும் படுமே"**

**(தொல்.பொருள். அகத்,ப-23.3)**

**திருமாலைக் தெய்வமாகக் கொண்டு வணங்கும், காடு சூழ்ந்த நிலப்பகுதி** *முல்லை* **எனவும், முருகன் காக்கும் மலைச்சூழ்ந்த நிலப்பகுதி** *குறிஞ்சி* **எனவும், இந்திரன் காக்கும் நீர்வளம் மிக்க ஆறு சூழ்ந்த நிலப்பகுதி** *மருதம்* **எனவும், வருணன் காக்கும் கடற்கரைப் பெருமணல் சூழ்ந்த நிலப்பகுதி** *நெய்தல்* **எனவும் சொல்லப்படும் எனத் தொல்காப்பியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. முதுவேனில் (மிகவும் வெதும்பிய வெந்நேர் பருவத்தில்) காடும் மலையும் வளம் இழந்து வறண்ட நிலமாக மாறுவதையே** *பாலை* **என வரையறுக்கப்படுவதைக் 'சிலப்பதிகாரம்' ஆகிய இலக்கியங்களில் காணலாம்.**

**"முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து**
**நல்லியல் பிரிந்து நடுங்குதுய ருறுத்துப்**
**பாலை என்பதொர் படிவங் கொள்ளும்"**

**(சிலப்பதிகாரம் ப.167)**

**இப்பாடல் வரியில் "அடியாருக்கு நல்லார் முல்லை குறிஞ்சி" எனக் கூறுவது, பழைய நடைமுறையிலிருந்து விலகி, இயற்கையுடன் இணைந்த நல்ல இயல்புகளை இழந்த நிலையில், வழிதவறியவரை நடுங்கச் செய்யும் துயரத்தையும் வறுமையையும் உருவாக்கும் நிலமாகப்** *பாலை* **நிலத்தைச் சுட்டிக்காட்டுகிறது. இயற்கையின் அழகு கெட்டுப் போன பாலை நிலத்தின் கொடுமையைக் குறித்து ஔவையார் தனது பாடல்களில் உரைக்கின்றார் என்பதையும் நாம் அறியலாம்.**

**"வெந்தாறற் கடுவெளி பொங்காப் போந்தென**
**நெற்றுவிளை உழிஞ்சில் வற்றல் ஆர்க்கும்**
**மலையுடை அருஞ்சுரம் என்பநம்**
**முலையிடை முனிநர் சென்ற ஆறே"**

**(குறுந்தொகை-39)**

இப்பாடலில், தலைவன் பிரிந்து சென்ற வழியில் வீசும் வெம்மையான, வலி தரும் விரைவான காற்று மரக்கிளைகளை அசைக்கும் காரணமாக, வாகை மரத்தின் வற்றிய இலைகள் ஒலிக்கின்றன. இதன் வழியாக, பாலை நிலத்தின் கொடுமையும் அதன் இயற்கைச் சூழலும் தலைவியின் வாயிலாக


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 7, Issue 03 (March -2026)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm07032026.08*

எடுத்துரைக்கப்படுகின்றன. மேலும் இந்துஜா (2022) "பத்துப்பாட்டில் வாழ்வியல் கோட்பாடுகளில் நிலங்கள்" என்ற கட்டுரையில், திணைமுறையின் வழியாக தமிழர் சமூக ஒழுக்கம், தொழில்கள் மற்றும் தெய்வ உணர்வுகள் எப்படி பிரதிபலிக்கப்படுகின்றன என்பதை ஆய்வு செய்கிறார். பத்துப்பாட்டு நூல்களில் நிலவியல் சித்திரங்கள் தமிழர் வாழ்வியலை நுணுக்கமாகச் சித்தரிக்கின்றனர்" என்பதை அறியமுடிகின்றது. இத்திணைமுறை, அக்கால வாழ்வியல் கட்டமைப்பை வெளிப்படுத்துவதோடு நவீன சமூகத்திற்கும் பொருந்தும் வகையில் இதனோடு ஒப்பிடுகையில், சமகாலப் பெண் கவிஞரான சக்தி ஜோதி தனது *"அன்பின் நிலம்"* என்னும் கவிதையில்,

***"கடல்,***
***நிலம்,***
***காடு,***
***மலை,***
***பாலை***
***என எங்கும் காணோம்***
***நமதன்பின் வெளியை;***
***ஒரே ஒருமுறை***
***என்னைப் பார்;***
***நமக்கான நட்சத்திரத்தை***
***உன் விழிகளில் இருந்து***
***உருவாக்குகிறேன்"[2]***

என உரைக்கிறார். இங்கு, சங்க இலக்கியங்களில் புவியியல் நிலங்கள் மனித உணர்வுகளைத் தாங்கிய அன்பின் ஐந்திணையில் முதற்பொருள்களாகக் கருதப்பட்டதுபோல, சக்தி ஜோதிக்கும் "அன்பு" தான் வாழ்வின் புதிய நிலமாகவும், மனித உறவின் அடையாளமாகவும் மாறுவதை இயற்கை நிலங்களை மீறியும் ஒரு புதிய வாழ்வியல் நிலமாக உருவெடுக்கிறது. இதன் மூலம் திணை அமைப்பு நவீனக் கவிதையில் மறுவடிவம் பெற்று, மனித உணர்வுகளின் மாற்றமற்ற தொடர்ச்சியை வெளிப்படுத்துகிறது.

**பொழுது**

திணைக்கோட்பாட்டின் அடிப்படையில் **பொழுது** இரண்டு வகைப்படுகிறது. *பெரும்பொழுது* மற்றும் *சிறுபொழுது*. ஒவ்வொரு திணைக்கும் தனித்தனி பெரும், சிறு பொழுதுகள் உண்டு. குறிஞ்சிக்கான பெரும்பொழுது குளிர், முன்பனி, சிறுபொழுது யாமம். முல்லைக்கான பெரும்பொழுது கார், சிறுபொழுது மாலை. பாலைக்கான பெரும்பொழுது இளவேனில், முதுவேனில், பின்பனி, சிறுபொழுது நண்பகல். மருதத்துக்கு ஆறு பெரும்பொழுதுகள், சிறுபொழுது வைகறை. நெய்தலுக்கு ஆறு பெரும்பொழுதுகள், சிறுபொழுது வைகறை மற்றும் ஏற்பாடு. இதன் அடிப்படையில் நம் முன்னோர்கள் ஓராண்டை ஆறு பருவங்களாக (கார், குளிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில்) பிரித்தனர். அதுபோல் சிறுபொழுது ஒரு நாளை வைகறை முதல் இரவு வரை ஆறு கூறுகளாகப் பகுத்து, வாழ்வியலோடு


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07032026.08*

தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. கார்காலமானது மழைக்காலத்தைக் குறிக்கும், குளிர் மற்றும் முன்பனி முன்னிரவு பனியைக் குறிக்கும், பின்பனி பின்னிரவு பனியைக் குறிக்கும், வேனில்காலம் கடும் வெயிலைச் சுட்டுகிறது. இதையே நன்னாகையார் தன் நூல்களில் தெளிவுபடுத்தியுள்ளார்.

**"விசும்பிவர் கல்லாது தாங்குபு புணரிச்**
**செழும்பல் குன்றம் றோக்கிப்**
**பெருங்கலி வான மோர்தரும் பொழுதே"**
**(குறுந்தொகை-287)**

இப்பாடலின் மாதங்கள் பன்னிரண்டும் கர்ப்பமாக இருந்ததன் காரணமாக நடக்க இயலாமல் சோர்ந்துபோன, பச்சை புளி சுவைக்கு ஆசைப்பட்டு இருக்கும், தன் முதல் குழந்தையை எதிர்பார்க்கும் பெண்களைப் போல, மேகங்கள் வானத்தில் உயர முடியாமல் நீரைச் சுமந்து, ஒன்றுடன் ஒன்று சேர்ந்து, பல்வேறு வளமான மலைகளை நோக்கி பெரிய முழக்கத்துடன் பறக்கின்றன. இந்தக் காட்சி, முல்லை நிலம் எனும் தமிழ் நாட்டின் பசுமையுடன் கூடிய நிலப்பகுதிக்கு ஏற்ற வகையில் வர்ணிக்கப்பட்டுள்ளது. இதனுடன் ஒப்பிடும்போது, சக்தி ஜோதி தனது *ஒளிரும் மின்மினி* கவிதையில், பருவங்களும் காலங்களும் போல காதலும் மனித வாழ்க்கையில் நெருக்கடியான உணர்வுகளை ஏற்படுத்துவதை சுட்டுகிறார்.

**"பருவம்**
**தவறி வளரும் பயிரென**
**உன் காதல்**
**வந்தடைந்து தழுவுகிறது**
**என்னை ஆற்றுப்படுத்த இயலாமல்**
**உன் நெஞ்சில் பனியென உறைந்திருக்கும் நான்**
**கடும் குளிர் பனியால் விரைத்து கிடைக்கும்**
**இந்த மென்னுடலை உன் நினைவின்"[3]**

சங்கப் புலவர்கள் இயற்கை பருவங்களை உணர்வுகளோடு இணைத்தது போலவே, சக்தி ஜோதி தனது கவிதையில் காதலை பருவத்திற்கும் பனிக்கும் ஒப்பிட்டு, உள்ளத்தின் அதிர்வுகளை வெளிப்படுத்துகிறார். அதிலும் பொழுதானது உணர்வின் சூழலைச் சொல்வது மட்டுமல்ல மாறாக பொழுதே பாத்திரமாவதும் சாத்தியம் தான் என இரவு மிருகம் என்று சுகிர்தராணி கூறுவதுப் போல சக்தி ஜோதியும் பொழுதைப் பத்திரமாக்குவதை அறியமுடிகிறது. சிறுபொழுதிணை தோற்றப்பிழை என்னும் கவிதையின் மூலம் அறியலாம்,

**"சூரியன் உதிக்கின்றது**
**சுற்றிச் சுற்றி வருகின்றது**
**காலம் நகர**
**மறைகின்றது பின் உதிக்கின்றது**
**உலகம் அறியும் இதை**
**பெருமைதான் இல்லையெனக்கு**
**சூரியனுக்கு மட்டுமல்ல**
**அதைச் சுற்றிச் சுற்றி வருவது**
**தான் தானென**
**எனக்கும் தெரியும்"[4]**

இக்கவிதையில், சூரியன் தினமும் உதித்து மறைந்து மீண்டும் உதிப்பது போல காலம் தொடர்ச்சியாகச் சுற்றிச் சுற்றி நகர்வதை கவிஞர் சுட்டிக்காட்டுகிறார். இதனை சிறுபொழுதான


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

வைகறை முதல் நண்பகல் வரை ஆறு வகையான நேரத்தை உலகம் அறிந்திருந்தாலும், அது சூரியனுக்கே உரிய பெருமை அல்ல, தானும் அதைப் போல வாழ்க்கையில் மீண்டும் மீண்டும் நிகழும் சுழற்சிகளை உணர்ந்து அனுபவிக்கிறேன் என்பதே கவிஞரின் உணர்வு. இவ்வாறு காலத்தின் சுழற்சியும் மனித வாழ்க்கையின் தொடர்ச்சியும் ஒன்றோடு ஒன்று இணைக்கப்படுகின்றன. இதனை எடுத்துக் கூறும் வகையில் சங்க இலக்கியங்களில் இயற்கைச் சூழல் மற்றும் காலப்பிரிவுகள் மனித உணர்வுகளின் அடிப்படையாக விளங்கியதைப் போலவே, சமகாலக் கவிதைகளில் அவை தனிப்பட்ட அனுபவங்களுக்கும், அன்பின் உள் உணர்வுகளுக்கும் உருவகமாகத் தோன்றுகின்றது.

**கருப்பொருள்**

ஐவகை நிலங்களுக்கும் ஏற்ப கருப்பொருள்கள் மாறுபடும் என்பதைத் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார்.

**"தெய்வம் உணாவே மாமதப் புட் பறை**
**செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ**
**அவ்வகைப் பிறவும் கருவென மொழிப"**
**(தொல். பொருள். ப-30,20)**

தொல்காப்பியத்தில் தெய்வம், உணவு, விலங்கு, மரம், பறவை, பறை, யாழ், தொழில், பண் என அமையும் இவற்றின் வகையும் இவை போன்ற பிறவும்கருப்பொருளாகும். அதாவது தெய்வம், மக்கள், உணவு, மரம், பறவை, பறை, தொழில், யாழ், பண், பூ, நீர், ஊர் என்பவனவாகும். இதனை ஔவையார் பாடலில் அறியலாம்.

**"சென்ற நாட்ட கொன்றையம் பசுவீ**
**நம்பொற் பசக்குங் காலைத் தம்பொற்**
**---- ---------- ---------- ------------**
**---------- ----------- ----------- ----------**
**புல்லென் காயாப் பூக்கெழு பெருஞ்சினை**
**மென்மயில் எருத்தில் பெருஞ்சினை**
**கான வைப்பிற் புன்புலத் தானே"**
**(குறுந்தொகை-183)**

முல்லை நிலத்தில் திருமால் தெய்வமாக, முயல்-மான்கள் விலங்குகளாகவும், கொன்றைகாயா மரங்களாகவும், முல்லை மலர் பூவாகவும் கருதப்படுகிறது. அதேபோல், அல்லோர்கள் மக்கள் வகையைச் சுட்டும் கருப்பொருளாக அமைந்துள்ளனர். இயற்கையில் ஒவ்வொரு பொருளும் தனக்கென ஒரு பங்கு வகிக்கிறது. மரம், இலை, மழை, காற்று ஆகியவை எப்படி ஒருவருக்கொருவர் தொடர்புடையவோ, அதுபோல மனிதனும் சமூகமும் இயற்கையோடு இணைந்தே உள்ளன என்பதை சக்தி ஜோதியின் *பலன்* கவிதை மூலம் அறியலாம்,

**"இலைகளால் தன்னை மறைத்தபடி நிற்கின்றது மரம்.**
**வானத்திலிருந்து பொழியும் மழைநீர்**
**மரத்தை நனைக்காமல் பார்த்துக்கொள்கிறது.**
**மரத்தின் இலைகள், இலைகளின் மேல் கோபம்கொண்ட வருணன்**
**காற்றின் துணை கொண்டு அசைக்கின்றான்.**
**பலனேதுமின்றி இலைகளில் காத்திருக்கும்**
**நீர்த்துளிகள்"[5]**

மழைத் துளிகள் இலைகளில் தங்கியிருந்து பலனின்றி காத்திருக்கும் நிலையை சித்தரிக்கிறது.



தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

இதில் நெய்தல் நிலத்தின் வருணன் தெய்வமான எடுத்துரைப்பதையும். இக்கவிதை மனித வாழ்க்கையில் பல முயற்சிகள், ஆசைகள், காத்திருப்புகள் சில சமயங்களில் நிறைவேறாமல் போகும் உண்மையை உணர்த்துகிறது. "இடம் என்பது மனிதனின் உள்ளுணர்வுகளையும் சமூக வாழ்வியலையும் பிரதிபலிக்கும் கருப்பொருள்" எனக் கட்டுரையில் இரா.செந்தில் (2007) வலியுறுத்துகிறார். இயற்கையின் சிறிய நிகழ்வுகளின் வழியாக, மனிதனின் அசாத்யங்களையும், நிறைவேறாத எதிர்பார்ப்புகளையும் வெளிப்படுத்தும் இந்தக் கவிதை, **"எல்லா காத்திருப்பும் பலன் தராது, ஆனால் அந்த அனுபவமே வாழ்வின் பாடமாக அமைகிறது"** என்ற உண்மையை நமக்கு நினைவுபடுத்துகிறது.

**உரிப்பொருள்**

**"போக்கெல்லாம் பாலை, புணர்தல் நறுகுறிஞ்சி**
**ஆக்கஞ்சே ரூடல் அணிமருதம்- நோக்குங்கால்**
**இல்லிருத்தல் முல்லை இரங்கள் நறுநெய்தல்**
**சொல்லிருச்த நூலின் றொகை"**
**(தொல், காலத்தமிழ்,ப-81)**

உரிப்பொருள் எது என்பதனைப் புலவர் குழந்தை பாடலில் அறியமுடிகின்றது. உரிப்பொருள் என்றால் ஐந்திணைக்குரிய அகவொழுக்கங்களையே குறிக்கும். "**உரிப்பொருள் என்பது**, அக இலக்கியங்களில் இடம் பெறும் மனித உள்ளுணர்வுகளின் வெளிப்பாடாகும். புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என ஐந்துவகைப் புணர்ச்சி நிலைகளாகவும், குறிஞ்சி முதல் மருதம் வரை ஐந்திணை நிலங்களோடு தொடர்புபடுத்தப்பட்டு, துறவறக் காதல் நிலைகளைக் கவியரசர்கள் புலமையோடு கவிதையாக்கியுள்ளனர்" என்பதை (முனைவர் அ.ஜனார்த்தலி பேகம், 2023) காணமுடிகின்றது. ஒவ்வொரு நிலத்திற்கும் நிகழும் ஒழுக்கங்கள் உரிப்பொருளாக அமைகின்றன. புணர்தல் என்பது தலைவன் தலைவி கூடுதல், இருத்தல் என்பது பிரிவைத் தாங்கி நிற்றல், ஊடல் என்பது தலைவியின் கோபம், இரங்கல் என்பது பிரிவால் வருந்தல், பிரிதல் என்பது தலைவன் தலைவி பிரிதல் ஆகும். இவ்வாறு குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய நிலங்களில் நிகழும் உரிப்பொருள், தலைவன்–தலைவியின் அகவாழ்வை வெளிப்படுத்துகின்றன. இதனையே தொல்காப்பியர்,

**"முதலொடு புணர்ந்த யாழோர் மேன**
**தவலருஞ் சிறப்பின் ஐந்நிலம் பெறுமே"**
**(தொல்,பொருள்,களவியல்-104)**

முதற்பொருளான நிலம், பொழுது, இயற்கைச் சூழல் ஆகியவை இணைந்து, காதலர்கள் **யாழோர்மையுடன் (ஒத்திசைவு, இனிமையுடன்) புணர்வதைக்** குறிப்பிடுகிறது. அந்த புணர்ச்சி, சங்க இலக்கியத்தில் **ஐந்திணைகளிலும்** சிறப்புடன் **தவறாமல்** நிகழ்கிறது என்பதைக் கூறுகிறார். இதனால் ஏற்படும் சிறப்பு குறையாது நிலைத்திருக்கிறது. குறிஞ்சி முதலான ஐந்நிலங்களிலும் இதே புணர்ச்சி நிகழ்வதை அறியலாம். நன்னாகையார் நெய்தலுக்குரிய உரிப்பொருளான இரங்கல் பற்றி எடுத்துரைப்பதை அறியலாம்.

**"சேறுஞ் சேறு மென்றலின் பண்டைத்தன்**
**மாயச் செலவாச் செத்து மருங்காற்று**
**மன்னிக் கழிகென் றேனே அன்னோ**
**ஆசா கெந்தை யாண்டுளன் கொல்லோ**



தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 7, Issue 03 (March -2026)*
**www.tamilmanam.in** *DOI: https://doi.org/10.63300/tm07032026.08*

**கருங்கால் வெண்குருகு மேயும்**
**பெருங்குளம் ஆயிற்றென இடைமுலை**
**நிறைந்தேன்"** **(குறுந்தொகை-325)**

இப்பாடல் வரியில் தலைவன் மேல் கோவம் கொண்ட தலைவி தலைவன் செல்வதாகக் கூறியும் அக்கோவத்தினால் நிலைப்பெற்று நீங்குக என்று கூறிய பின்னரும் பிரிவால் ஏற்பட்ட துயரம் காரணமாக, தன் கண்நீரால் கரிய காலையுடன் கூடிய வெள்ளை நாரைகள் உணவு உண்ணும் பெருகுளம் போல் ஆனாள். இதுவே தலைவி தலைவனின் பிரிவைத் தாங்காமல் வருந்துவதைச் சுட்டும் *இரங்கல்* ஆகும். (அ.முரளி, 2022) "**உரிப்பொருளின் சூழலை** மையமாகக் கொண்டு, சங்க இலக்கியங்கள் தமிழ் சமூகத்தில் ஏற்படுத்திய மாற்றங்களை ஆராய்கின்றது. **அகம் புறம் வாழ்வியலின் வளர்ச்சியால்** உருவான **குடும்ப அமைப்பு, சமூக ஒழுங்குகள்** போன்றவை, உரிப்பொருளின் பின்னணி சூழலுடன் நெருக்கமாக தொடர்புடையது" என்பதை அ.முரளி (2022) சுட்டிக்காட்டப்படுகின்றார். நெய்தல் நிலத்தின் உரிப்பொருள் இதன் மூலம் வெளிப்படுகிறது. நெய்தல் நிலத்திற்குரிய உரிப்பொருளான ஒழுக்கத்தைப் பற்றியும் தலைவி தலைவனைப் பிரிந்து வருத்தமுடன் இருந்தமையை அறிந்துகொள்ளமுடிகின்றது. இதனுடன் ஒப்பிடும்போது, சக்தி ஜோதி தனது "*ஈர நிலம்"*

**"எப்பொழுதும் உனக்கு மட்டும்**
**சாத்தியமாகி விடுகின்றது**
**நானருகில் இருக்கையில்**
**கார்மேகம் கனிந்து**
**பெய்யும் மழையென**
**என்மீது முத்தமழை பொழிய**
**சுற்றப்புறம்**
**என்னைச் சஞ்சலத்தில் ஆழ்த்த**
**சாத்தியங்களில் கணித்தியங்களில்**
**போட்டுப் போட்டு பார்த்துக் கொண்டிருக்கிறேன்**
**நிலமெல்லாம் நனைய"[6]**

இக்கவிதையில் தலைவி அருகில் இருப்பதால், தலைவனுக்கு எல்லாவற்றும் எளிதாகச் சாத்தியமாகி விடுகின்றது. அவன் அருகில் வந்தவுடன், கார்மேகம் கனிந்து மழை பொழிவது போல, அவன் முத்தங்கள் மழை போல் பொழிகின்றன. அதனால் தலைவி சஞ்சலத்தில் ஆழ்கிறாள். அவன் செய்யும் செயல்கள், சாத்தியங்கள் எல்லாம் கணக்கிட்டு பார்த்தபடி, அவளைச் சுற்றிய உலகமே மழையால் நனைந்தது போல, அவளது உள்ளம் நனைந்து நிறைகிறது. சங்க இலக்கியத்தில் உரிப்பொருள் தலைவன் தலைவியின் அகவாழ்வை இயற்கையோடு இணைத்து வெளிப்படுத்துகிறது. "அகத்திணையிலுள்ள உரிப்பொருள் என்பது, புணர்தல் முதல் ஊடல் வரை காதல் உணர்வுகளின் ஒழுக்கநிலை அடிப்படையிலானப் பரிணாமமாகும். இது துறவறக் காதலின் சமூக ஒழுங்கை வெளிப்படுத்துகிறது" என்பதை நெய்தல் நிலத்தில் தலைவியின் வருத்தம் கண்நீரால் பெருகுளமெனச் சித்தரிக்கப்பட, சக்தி ஜோதியின் "ஈர நிலம்" கவிதையில் தலைவனின் அன்பு மழைபோல பொழிந்து தலைவியை நனைக்கிறது. இவ்விரண்டிலும் காதல் உணர்வுகள் இயற்கைச் சித்திரங்களின் வழி ஆழமாக வெளிப்படுத்தப்படுகின்றது.

**முடிவுரை**

சங்க இலக்கியத்தின் திணைக்கோட்பாடு இயற்கையின் வழியாக மனித உணர்வுகளைப்



தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

பிரதிபலித்தது போலவே, சக்தி ஜோதியின் *நிலம் புகும் சொற்கள்* கவிதைகள் பெண்ணின் உடல், மனம் மற்றும் சமூக அனுபவங்களை நிலம் மற்றும் இயற்கைச் சின்னங்களோடு பிணைத்து வெளிப்படுத்துகின்றன. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை போன்ற ஐந்திணைகளும், இவரது படைப்புகளில் காதல், காத்திருப்பு, பிரிவு, தனிமை, எதிர்ப்பு, சுதந்திரத் தேடல் ஆகிய பெண்ணிய உணர்வுகளின் அடையாளங்களாக மாறுகின்றன. இவ்வகை கவிதைகள், திணை மரபை தொடர்கின்றன மட்டும் அல்லாமல், அதனை நவீன பார்வையில் மீள்பதிப்பாக்கம் செய்து, சமகாலப் பெண் குரலுக்கான தனித்துவமான இலக்கிய வெளியை உருவாக்குகின்றன. சங்க இலக்கியத்தில் நிலம், பொழுது, கருப்பொருள், உரிப்பொருள் ஆகிய கூறுகள் மனித வாழ்வியலை இயற்கையின் நிகழ்வுகளோடு இணைத்து ஒருங்கிணைத்தன. இதையே தழுவி, சக்தி ஜோதி தனது கவிதைகளில் இயற்கையின் உருப்படிகளைப் பெண்ணின் உடல் மற்றும் உளவியல் அனுபவங்களுடன் இணைத்து, சமகாலச் சூழலுக்கேற்ப ஒரு புதிய காட்சிப்படலத்தையும் உரையாடலையும் உருவாக்குகிறார். அவருடைய கவிதைகள் பாரம்பரிய திணைகள் மீது அடித்தளம் அமைத்தபோதிலும் பெண் சுதந்திரம், காதல், தனிமை, எதிர்ப்பு, சமூகக் கட்டுப்பாடுகள் போன்ற உணர்வுகளுக்குரிய வலியுருக்கும் குரலாக இத்தொகுப்பு அமைந்து, திணைக்கோட்பாட்டின் புதிய வாசிப்பு வழிகளை உருவாக்கும் முக்கியமான இலக்கியப் பங்களிப்பாகும்.

**குறிப்புகள்**

1. சக்தி ஜோதி, நிலம் புகும் சொற்கள், வம்சி புக்ஸ், 19 டி.எம்.சாரோன், திருவண்ணாமலை - 606 601, புதிய பதிப்பு - மார்ச் 2014, பக்கம் - 26.
2. மேலது பக்கம் - 33.
3. மேலது பக்கம் - 71.
4. மேலது பக்கம் - 29.
5. மேலது பக்கம் - 56.
6. மேலது பக்கம் - 32.
7. தொல்காப்பியம், பொருளதிகாரம் (உரைவளம்) அகத்திணையியல், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், பதிப்பாசிரியர் ஆ.சிவிலிங்கனார், டி,டி,டி தரமணி, சென்னை, பதிப்பகம் - 1991.
8. ஜெயபிரியா ஜெ., இலக்கியம் சுட்டும் திணைச்சார்ந்த இணைநெறி, Int. Res. J. Tamil, 30.04.2021, DOI: 10.34256/irjt21s216, பக்கம் 82-87.
9. பரத் ஆ., ஐந்திணை தமிழ் மக்களின் வாழ்விடமும் தொழில்களும், தமிழ்மொழி மற்றும் இலக்கியப் பன்னாட்டு ஆய்விதழ். International Journal of Tamil Language and Literary Studies, 7(SPL Issue–2), ப.486–494, 2025, DOI: 10.5281/zenodo.15552781.
10. பெருமாள் த., இராமமூர்த்தி வ., *சங்க இலக்கியத்தில் மருதத்திணைக்குரிய முதல், கரு, உரிப்பொருள்கள்*. International Research Journal of Tamil, 4(2), ப. 270–287, 2022, DOI:10.34256/irjt22238.

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07032026.08*

11. புலவர் குழந்தை, தொல்காப்பியர் காலத் தமிழர், பூம்புகார் பதிப்பகம், சென்னை, பதிப்பு - 1985.
12. சிவலிங்கனார் ஆ., தொல்காப்பிய பொருளதிகாரம் களவியல் (உரைவளம்), உலக தமிழாராச்சி நிறுவனம், டி.டி.டி. (அஞ்சல்) தரமணி, சென்னை, பதிப்பு - 1995, ப.145, பாடல்-104.
13. அடியார்க்கு நல்லார், சிலப்பதிகாரம் மூலமும் அரும்பதவுரையும், உ.வே.சா. பதிப்பகம், சென்னை, ஏழாம் பதிப்பு-1960.
14. சௌரிப்பெருமாள் அரங்கனார். தி, குறுந்தொகை மூலமும் புத்துரையும், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை,பதிப்பு-2015.
15. செந்தில் இரா., சங்க அகப்பாடல்களில் கருப்பொருள், திருச்சிராபள்ளி பாரதிதாசன் பல்கலைக்கழகம் (பிஎச்,டி.,) பட்டத்திற்காக அளிக்கபெறும் ஆய்வேடு, பதிப்பு - 2007.
**16.** இந்துஜா கி.பு., பத்துப்பாட்டில் வாழ்வியல் கோட்பாடுகளில் நிலங்கள், சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், VOL.4, ISSN.4, YEAR- 2022, DOI: 10.34256/IRJT22438.
**17.** முனைவர் ஜனார்த்தலி பேகம் அ., 2023, குறுந்தொகையில் முதல், கரு, உரிப்பொருள், புதிய அவையம், VOLU: 07, ISSUE: 02, ISSN: 2456-861X, பக்கம் - 411.
**18.** **முரளி அ., (2022)** *“சங்க இலக்கியத்தில் சமூக அமைப்பு, சமுதாய அமைப்பு மற்றும் உரிப்பொருள் சூழல்”*, சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், Published: 15-11-2022, Vol. 4, Issue: S-21, Year: 2022.

## References

[1]. Adiyarkku Nallaar, *Silappadhigaaram Moolamum Arumpadhavuraiyum*, U. V. Saa. Pathippagam, Chennai, Elaam Pathippu – 1960.

[2]. Bharat A., (2025). *Ainthinai Tamil Makkalin Vaazhvidamum Thozhilgalum*, *Tamizhmozhi Matrum Ilakkiya Pannattu Aayvidhazhal*, *International Journal of Tamil Language and Literary Studies*, 7(SPL Issue–2), 486–494. DOI: 10.5281/zenodo.15552781.

[3]. Ira. Senthil (2007), *Sanga Agappaadalgalil Karupporuḷ*, Thiruchirappalli Bharathidasan Palkalaikazhagam (Ph.D) Pattaththirkaka Alikkaperum Aayvedu.

[4]. J. Jayapriya, 2021, *Ilakkiyam Suttum Thinaichaarndha InaineRi*, *Int. Res. J. Tamil*, 30.04.2021, DOI: 10.34256/irjt21s216, Pakkam 82–87.

[5]. Ki. Pu. Hinduja, *Paththuppaattil Vaazhviyal Kotpatugalil Nilangal*, *Sarvadesa Tamizh Aayvidhazhal*, VOL.4, ISSN.4, YEAR–2022, DOI: 10.34256/IRJT22438.

[6]. Munaiyvar A. Janarthali Begam, 2023, *Kurunthogaiyil Mudhal, Karu, Uripporuḷ*, *Puthiya Avaiyam*, VOL: 07, ISSUE: 02, ISSN: 2456-861X, Pakkam – 411.

[7]. Perumaal T., Raamamoorthi, V. (2022). *Sanga Ilakkiyaththil Maruthaththinaikkuriya Mudhal, Karu, Uripporulgal*, *International Research Journal of Tamil*, 4(2), 270–287. DOI:10.34256/irjt22238.

[8]. Pulavar Kuzhanthai, *Tholkaappiyar Kaalath Thamizhar*, Poombukaar Pathippagam, Chennai, Pathippu–1985.

[9]. Sakthi Jothi, *Nilam Pugum Sorkal*, Vamsi Books, 19 T.M. Sharon, Thiruvannamalai – 606 601, Puthiya Pathippu – March 2014,

- Pakkam – 26.
- Pakkam – 29.
- Pakkam – 32.
- Pakkam – 33.
- Pakkam – 56.
- Pakkam – 71.

[10]. Sauripperumaal Aranganar. T., *Kurunthogai Moolamum Puththuraiyum*, Ulaga Tamizhaaraychi Niruvanam, Chennai, Pathippu – 2015.

[11]. Tholkaappiyam, *Poruladhikaaram (Uraivalaam) – Agathinaichchiyal*, Ulaga Tamizhaaraychi Niruvanam, Pathippaasiriyar: A. Sivilinganar, T.T.T. Tharamani, Chennai, Pathippakam – 1991.

[12]. *Tholkaappiya Poruladhikaaram – Kalaviyal Urai*, Pakkam 145, Paadal – 104.

Publisher's Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.